# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 24.08.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்கள் அவர்களிடம் பைஅத் செய்தது தொடர்பாக உள்ள சம்பவங்களை எடுத்துக் கூறுகிறேன். குறிப்பாக பெரும்பாலும் அரேபிய அஹ்மதிகளிடமிருந்து எங்களுக்கு சஹாபாக்களின் சம்பவங்களைக் கூறுங்கள் என்று கேட்கப்படுகிறது. ஏனென்றால், அப்படிப்பட்ட ஒவ்வொரு சம்பவத்துடன் எங்கு நமக்கு அந்த சஹாபாக்களின் மனத்தூய்மை, பற்று, தியாகங்கள், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்கள் கடந்து வந்த துன்பமான நிலைமைகள் ஆகியவற்றை பற்றி தெரிய வருகிறதோ அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபையின் நட்பும் கிடைத்து விடுகின்றது. ஏதாவதொரு தலைப்பின் கீழ் எந்த சம்பவம் கூறப்பட்டாலும் அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்க்கையின் உயர்வான அம்சம் நம் முன்னால் வந்து விடுகின்றது.

அதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபைகளின் நிலைமை பற்றி தெரிய வருகிறது. இந்தக் காலத்தில் இந்த சஹாபாக்கள் நமக்கு முன்னால் முன்மாதிரிகளாக திகழ்கின்றனர். ஏனென்றால், இவர்கள் தான், வஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்பதற்கு உண்மையில் நேரடியாக பொருந்தக் கூடியவர்களாக உள்ளனர்.

நமக்காக இந்தக் காலத்தில் ஆன்மீக இலக்குகளைக் கடப்பதற்கான வழிகளை தங்களது முன்மாதிகளை நிலைநாட்டியவாறு நமக்கு இவர்கள் எளிதாக்கித் தந்துள்ளார்கள். இந்த வழிகளை நமக்கு காட்டி தந்துள்ளார்கள்.

எனவே இந்த சம்பவங்களை இந்த சான்றோர்கள் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்களோ அந்த குடும்பத்திற்கும் முக்கியமானதாகும். அவை பின்பற்றத்தக்க முன்மாதிரிகளாகும். அவர்களுக்கு மட்டும் அல்ல. மாறாக, ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானின் முன்னேற்றத்திற்கும் அதில் அவர் உறுதியாக நிலைத்திருப்பதற்குரிய முன்மாதிரிகளாகவும் அவை இருக்கின்றன. இதனால் புதிதாக பைஅத் செய்பவர்களும் குறிப்பாக இவற்றைக் கூறும்படி கேட்கின்றனர். பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அழகிய பண்புகளைப் பற்றியும் இதன் மூலமாக நமக்கு தெரிய வருகிறது. அது நமது ஈமானுக்கு ஒளியூட்டுகிறது.

முதலாவது அறிவிப்பு ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிபுடையதாகும். இந்த சம்பவமும் இதற்கு முன்னர் ஒருமுறை வேறு விதமாக எடுத்து கூறப்பட்டது.

கூறுகின்றார்கள்: அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்த நாங்கள் எங்களை இறையச்சம் உள்ளவர்களாகவும் ஹராமான ஒவ்வொரு விசயத்திலிருந்தும், பொய்யிலிருந்தும் விலகி இருப்பவர்களாகவும் கருதி வந்தோம். ஏறக்குறைய இது 1902 ஆம் ஆண்டு நடந்த சம்பவமாகும்.

அது மார்ச் மாதமாக இருந்தது. அஹ்லே ஹதீஸைச் சார்ந்த எங்களில் சிலர் ஜெஹ்லமிலிருந்து லாஹுருக்குப் புறப்பட்டுச் சென்றோம். அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் லாஹுரின் மாநாட்டை சென்று பார்ப்பதற்காக சென்றோம். ஒவ்வொரு வருடமும் இந்த மாநாடு நடைபெற்று வந்தது.

நாங்கள் லாஹுர் வந்து சேர்ந்து மாநாட்டுத் திடலை நோக்கி போய்க் கொண்டிருந்தோம். அப்போது மாநாட்டுப் பந்தலுக்கு வெளியே சுவரோடு ஒட்டி நின்றவாறு ஒரு மவ்லவி சாஹிப் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவரது ஒரு கையில் திருக்குர்ஆன் இருந்தது. இன்னொரு கையில் வைத்திருந்த சிறு சிறு பிரசுரங்களை அவர்

வழங்கிக் கொண்டிருந்தார். மேலும் நாவால் மிர்ஸா தொழுநோயாளியாக ஆகிவிட்டார். நவூதுபில்லாஹ் என்று கூறிக்கொண்டே இருந்தார்.

கூறுகின்றார்கள்: நாங்கள் இதைக் கேட்டு வியப்படைந்தோம். இந்த அளவு ஒருவர் தைரியமாக செயல்பட முடியுமா? அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு திருக்குர்ஆனை கையில் பிடித்தவாறு அவர் பொய் கூறுவார் என்பதை எங்களது உள்ளம் யூகித்துக்கூட பார்த்திருக்க முடியாது. கூறுகின்றார்கள்: நாங்கள் மூன்று நபர்கள் இருந்தோம். நான் அவரிடமிருந்து அந்த பிரசுரத்தை வாங்கி படிக்க ஆரம்பித்தேன். இதிலும் மிர்ஸா தொழுநோயாளியாக ஆகிவிட்டார். நவூதுபில்லாஹ். அவர் நபிமார்களை இழிவுபடுத்தினார் போன்ற விசயம்தான் இருந்தது.

நான் எனது தோழர்களிடம் வாருங்கள். காதியான் செல்வோம் என்று கூறினேன். அல்லாஹ் இவர்களை நேரான வழியில் கொண்டு வரவேண்டியது இருந்தது. பைஅத் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டியது இருந்தது. இந்த மவ்லவியின் இந்த அறிவிப்பு இவர்கள் காதியான் செல்வதற்குக் காரணமாக அமைந்து விட்டது.

கூறுகின்றார்கள்: இதன் மூலம் மிர்ஸா சாஹிபின் நிலைமையைக் கண்ணால் கண்டு அவற்றை எங்களுடன் ஒவ்வொரு நாளும் பேசுகின்ற எங்களது நகரங்களிலுள்ள மிர்ஸாயிகளுக்கு அது பற்றி கூற முடியும். பதினான்காவது நூற்றாண்டின் ஆலிம்கள் பொய் கூறுகின்றனர் என்று எங்கள் ஆலிம்கள் தொடர்பாக நீங்கள், அதாவது அஹ்மதிகள் செய்யும் ஆட்சேபனைகளுக்கு எதிரில் நாங்கள் கண்ணால் கண்ட காட்சியை நாங்கள் கூற முடியும். இவ்வாறாக அஹ்மதிகளை நாங்கள் தெளிவாக பொய்யர்களாக ஆக்கிவிடுவோம் என்று நாங்கள் கூறினோம்.

கூறுகின்றார்கள்: முதலில் எனது தோழர்கள் நான் கூறியதை மறுத்து வந்தனர். பிறகு நான் இதை வலியுறுத்திக் கூறிய பிறகு அவர்கள் இதற்கு சம்மதித்தனர். நாங்கள் மூவரும் லாஹுரிலிருந்து சவாரி செய்தவாறு பட்டாலா வந்தோம். அங்கிருந்து மாலை அஸர் நேரத்தில் காதியான் வந்து சேர்ந்தோம். விருந்தினர் விடுதிக்குச் சென்றோம். மக்ரிப் தொழுகைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது நான், ஒருவரிடம் மிர்ஸா சாஹிப் எங்கு தொழுவார்களோ அந்த இடத்தைக் காட்டுங்கள். நாங்கள் அவர்களுக்கு அருகில் நின்று அவர்களைப் பார்க்க விரும்புகின்றோம் என்று கூறினேன். யாரிடம் நாங்கள் இதை கேட்டோமோ அந்த நபர்தான் என்று நினைக்கின்றேன். அவர் எங்களுடன் வந்தார். ஹுஸூர் நின்றவாறு தொழுகின்ற அந்த இடத்தை அவர் எங்களுக்கு காட்டினார். நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால் ஹுஸூர் அவர்கள் வந்து எனது வலப்பக்கம் நிற்கப் போகின்ற அந்த இடத்தில் நான் அமர்ந்தேன். மற்ற இரண்டு நண்பர்களும் எனக்கு வலப்பக்கமாக அமர்ந்து கொண்டனர். இந்த பள்ளிவாசல் ஹுஸூருடைய வீட்டுடன் ஒட்டியிருந்தது. இதனை இப்போது மஸ்ஜித் முபாரக் என்று கூறுகின்றார்கள். அப்போது அந்த பள்ளிவாசல் எவ்வளவு சிறியதாக இருந்தது என்றால் அதிகபட்சம் நீளமாக 6 அல்லது 7 ஸஃப்கள்தான் அதில் நிற்க முடிந்தது. ஒரு ஸஃப்பில் ஆறு நபர்களைவிட அதிகமான நபர்கள் நிற்க முடியாது. அதாவது 35 அல்லது 40 நபர்களுக்கான இடம்தான் இருந்தது.

கூறுகின்றார்கள்: சில நிமிடங்களுக்கு பிறகு மக்ரிப் தொழுகைக்கான பாங்கு கொடுக்கப்பட்டது. அதற்கு பிறகு சில நிமிடங்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் வந்தார்கள். எங்களுக்கு பக்கத்திலேயே கதவு இருந்தது. அந்தக் கதவை திறந்து ஹுஸூர் வெளியில் வந்து என்னுடன் நின்றார்கள். மர்ஹூம் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் முன்னால் வந்து நின்றார்கள். பாங்கு சொல்பவர் தக்பீர் சொல்ல ஆரம்பித்தார். தக்பீர் முடிவயடையும் வரை நான் ஹுஸூர் அவர்களது பாதங்கள் முதல் தலை வரையிலுள்ள எல்லா உறுப்புகளையும் பார்த்தேன். எதுவரையென்றால், அவர்களது அருளுக்குரிய தலையிலிருந்த முடிகள் மீது எனது பார்வை பட்ட போது எனது உள்ளத்தின் நிலைமை வேறு விதமாக ஆகிவிட்டது. இறைவா! இத்தகைய தோற்றத்தையும் வடிவத்தையும் கொண்ட மனிதரையா இன்று வரை நான் பார்க்கவில்லை! என்று நான் எனது மனதில் கூறிக்கொண்டேன். முடிகள் என்ன? அவை தங்கக் கம்பிகளாக இருந்தன. கண்கள் பாதி மூடியிருந்தன. இது

முழுமையான வெட்கத்தின் முன்மாதிரியாகத் திகழ்ந்தது. கை, கால்களின் அழகு தனியாக உள்ளத்தை தன் பக்கம் ஈர்த்துக் கொண்டது. இதே சிந்தனையில் நான் மூழ்கியிருந்த போது இறைவா! இந்த மனிதரையா எங்களது மவ்லவி பொய்யர் என்றும், நபிமார்களை இழிவுபடுத்தக் கூடியவர் என்றும் கூறினர் என நினைத்தவாறு அதைப் பற்றிய நினைவில் மூழ்கி விட்டேன். நான் இதே எண்ணத்தில் மூழ்கியிருந்த சமயத்தில் இமாம் அல்லாஹு அக்பர் என்று கூறி தொழுகையை ஆரம்பித்தார். நான் தொழுகையில் இருந்தேன். ஆனால் ஸலாம் கொடுக்கும் வரை நான் வியப்பில் ஆழ்ந்திருந்தேன். இறைவா! தாடி பெரிதாக வைத்து ஷரீஅத் கூறியபடி தனது முடிகளை சிரைத்தவாறு இருந்த நமது மவ்லவி திருக்குர்ஆனை கையில் ஏந்தியவாறு சத்தியம் செய்து கூறிக் கொண்டிருந்தார். மிகவும் இழிவான சொற்களைக் கூறியவாறு ஹுஸுர் அவர்களது பெயரை மீண்டும் மீண்டும் கூறியவாறு மிர்ஸா தொழுநோயாளி ஆகி விட்டார் நவூதுபில்லாஹ் என்று கூறுகின்றார். இந்த எண்ணம் எனது உள்ளத்தில் சந்தேகத்தின் இன்னொரு நதியை உருவாக்கி விட்டது. திருக்குர்ஆனை ஏந்தியவாறு இறைவன் மீது ஆணையிட்டு கூறும் ஒருவர் பொய் கூறுவாரா என்று சில நேரம் உள்ளம் கூறியது. அவர்களது மவ்லவிமார்கள் இவ்வாறு கூறுவார்கள் என்று அவர்களால் எதிர்பார்க்க முடியவில்லை.

தொழுகையில் நிற்கக் கூடிய இந்த நபர் மிர்ஸா அல்லாத வேறொரு நபராக இருப்பாரா? புதிதாக வருபவர்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு செய்திருக்கலாம் என்று உள்ளம் கூறியது. எப்போது ஹுஸுர் அவர்களின் தூய்மையான ஒளிமயமான தோற்றம் கண் முன்னால் தெரிந்ததோ அப்போது சத்தியம் செய்தவர் இவர்கள் மீதுள்ள பகைமையின் விளைவாக ஒருவேளை பொய் கூறுகின்றாரோ? மக்கள் அவர் கூறுவதை கேட்டு விட்டு காதியான் பக்கம் போகாமல் இருந்து விட வேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறப்படுகிறதா? என்று உள்ளம் கேட்டது.

தொழுகை முடிந்தது. ஹுஸுர் இருக்கையில் அமர்ந்தார்கள். முப்தி சாஹிப் இருந்தால் முன்னால் வரவும் என்று முதலில் கூறினார்கள். முப்தி சாஹிப் முன்னால் வந்ததும் ஹுஸுர் அவர்கள் மவ்லவி சாஹிப் எங்கே? என்று கேட்டார்கள். மவ்லவி சாஹிப் அதாவது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எல்லாவற்றிற்கும் இறுதியாக இருந்த ஸஃப்பிலிருந்து எழுந்து வருவதை நான் பார்த்தேன். ஹுஸுர் பேசத் தொடங்கினார்கள். அது பிளேக் நோய் பற்றிய விசயமாக இருந்தது. ஹுஸுர் அவர்கள் மலக்குகள் பஞ்சாபில் கறுப்பு நிற செடிகளை நடுவதை நான் கண்டேன் என்று நான் முதலிலேயே மக்களுக்கு தெரிவித்தேன். அப்போது நான் அவர்களிடம் இது என்ன? என்று கேட்டேன். அதற்கு இது பிளேக்கின் செடியாகும். இவை அடுத்து வரும் காலத்தில் பஞ்சாபில் வெளிப்படப் போகிறது என்று அவர்கள் பதில் கூறினார்கள். மக்கள் இதைக் கேட்டு எள்ளி நகையாடினர். பிளேக் நோய் எப்போதும் கடற்கரைப் பகுதி வரைதான் வரும். நாட்டிற்குள் ஒருபோதும் வராது என்று கூறினர். ஆனால், இப்போது பாருங்கள். அது பஞ்சாபின் சில நகரங்களில் வெளிப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு இ–ா வரை ஹுஸுர் பேசிக் கொண்டிருந்தார்கள். இ–ா தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸுர் உள்ளே சென்று விட்டார்கள். நாங்களும் திரும்ப வந்து தூங்கினோம். நமது மவ்லவி குர்ஆனை ஏந்தியவாறு இறைவன் மீது ஆணையிட்டுக் கூறினார். ஆனால், இங்கோ விசயம் அவர் கூறியதற்கு முற்றிலும் எதிராக இருக்கின்றதே? இது என்ன இரகசியம்? என்று ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம். காலையில் நாங்கள் எழுந்த போது மவ்லவி நூருத்தீன் சாஹிப் உண்மையை கூறுவார். எனவே அவரிடம் இவர்தான் மிர்ஸா சாஹிபா? அல்லது வேறு நபரா? என்று கேட்க வேண்டும் என்று நினைத்தோம். அவர்களது கிளினிகிற்கு நாங்கள் சென்றதும் ஒரு மவ்லவி சாஹிப் அவர்கள் ஒரு ஆட்சேபனையை அவர்களிடம் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார். அதாவது இதற்கு முன்பு தோன்றிய நபிமார்கள், வலிமார்கள் அனைவரும் பல நாட்கள் பசியுடன் கழித்த பிறகு மிகவும் சாதாரணமான உணவையே உண்டு வந்திருக்கின்றனர். ஆனால், மிர்ஸா சாஹிப் நெய்சோறும் இனிப்புச் சோறும் சாப்பிடுவார் என்று நாங்கள் கேள்விப்படுகின்றோம் என்று கூறினார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மவ்லவி சாஹிப்! நான் திருக்குர்ஆனில் நெய்சோறும் இனிப்புச்சோறும் ஹலாலான உணவு என்றே படித்துள்ளேன். அவை ஹராமாகும் என்று எழுதப்பட்டிருப்பதாக

எங்காவது நீங்கள் பார்த்திருந்தால் கூறுங்கள் என்று பதில் கூறினார்கள். மவ்லவி சிறிது நேரம் ஒன்றும் கூறாமல் இருந்தார். அப்போது உடனடியாக நான் ஒரு பிரசுரத்தை எடுத்து மவ்லவி சாஹிப் முன்னால் வைத்தேன். மேலும் எங்களது மவ்லவி ஒருவர் திருக்குர்ஆனை கையில் ஏந்தியவாறு இறைவன் மீது ஆணையிட்டு, நவூதுபில்லாஹ் மிர்ஸா சாஹிப் தொழுநோயாளியாக ஆகிவிட்டார் என்று கூறினார். ஆனால் எங்களுக்கு இவர்தான் மிர்ஸா சாஹிப் என்று கூறப்பட்டது. அவரோ ஆரோக்கியத்துடன் இருக்கின்றார். தொழுகையில் நாங்கள் பார்த்த இவர்தான் மிர்ஸா சாஹிபா? அல்லது வேறு ஒரு நபரா? என்பதை நீங்கள் எங்களுக்கு கூறுங்கள் என்றேன். அப்போது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் தமது பாக்கெட்டில் கை போட்டு அதே பிரசுத்தை எடுத்துக் காட்டி, பாருங்கள்! உங்களது மவ்லவிமார்கள் இந்த பிரசுரத்தை அனுப்பியுள்ளனர். இவர் தான் மிர்ஸா. மறுபுறம் குர்ஆனை கையில் ஏந்தியவாறு பொய் கூறிய உங்களது மவ்லவி இருக்கின்றார். இவர்களில் உண்மையாளர் யார்? என நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறினார்கள். பிறகு எனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. பாக்கியமில்லாதவனே! இப்போது கூட நீ பைஅத் செய்யமாட்டாயா? என்று தான் என்னிடம் கேட்டுக் கொண்டேன். உண்மையில் இந்த மவ்லவிகள் இந்தக் காலத்தின் தஜ்ஜால்களாக உள்ளனர். நாங்கள் மூவரும் ளுஹர் நேரத்தில் ஹுஸூர் அவர்களிடம் எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினோம். அவசரப்பட வேண்டாம். சில நாட்கள் இங்கு தங்கியிருங்கள். மீண்டும் மவ்லவிகள் உங்களை தடுமாற்றத்திற்கு ஆளாக்கிவிடக்கூடாது. அதன் காரணமாக நீங்கள் அதிகமாக பாவிகளாக ஆகிவிடக் கூடாது என்று ஹுஸூர் கூறினார்கள். நான் அழுதவாறு ஹுஸூர் நாங்கள் ஒருபோதும் தடுமாற்றமடைய மாட்டோம் என்று கூறினேன். அடுத்த நாள் நாங்கள் மூவரும் பைஅத் செய்தோம். பிறகு வீட்டிற்கு திரும்பி வந்தோம்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

1891 ஆம் ஆண்டில் ஸிக்வான் என்ற இடத்திற்கு நான் இடமாற்றம் செய்யப்பட்டேன். அங்கு மியான் ஜமாலுத்தீன் சாஹிப், மியான் இமாமுத்தீன் சாஹிப் மற்றும் இமாம் கைருத்தீன் சாஹிப் ஆகியோரின் அறிமுகம் எனக்கு கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மைப் பற்றி மஹ்தி என்றும் மஸீஹ் என்றும் வாதம் புரிந்துள்ளதைப் பற்றி கூறிய போது எனக்கு அந்த வாதங்கள் தொடர்பாக எனது உள்ளத்தில் எவ்வித காழ்ப்புணர்ச்சியும், விரோதமும் எனக்கு இல்லாமல் இருந்ததால் நான் அவர்கள் கூறியதை தீயதாக எடுத்துக் கொள்ளவில்லை.

மாறாக, மவ்லவிகள் ஏன் இவ்வாறு கூறுகின்றார்கள்? என்ற எண்ணமே எனக்கு ஏற்பட்டது. இதற்கான காரணம் பெரும்பாலான எனது மூதாதையர்கள் மார்க்கப் பற்றுள்ளவர்களாக இருந்ததால் மவ்லவிமார்கள் மீது அன்பு வைத்திருந்தனர். இதன் காரணமாகவே நானும் மவ்லவிமார்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டேன். அவர்கள் (அதாவது மியான் இமாமுத்தீனும் மற்றவர்களும்) எனக்கு இஸாலே அவ்ஹாம் என்ற நூலைப் படிப்பதற்காக எனக்கு தந்த போது நான் அந்த நூலை படிப்பதற்கு முன்னர் இறைவா! நான் முற்றிலும் அறிவிலியாகவும் ஒன்றும் அறியாதவனாகவும் இருக்கின்றேன். எது உனது அறிவில் உண்மையோ அதன் மீது நீ எனது உள்ளத்தை நிலைத்திருக்கும்படி செய்வாயாக! என்று நான் துஆ செய்தேன். அந்த துஆ எந்த அளவுக்கு விரைவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றால், நான் இஸாலே அவ்ஹாமை படிக்க ஆரம்பித்த போது எனது உள்ளத்திற்கு எந்த அளவு நிம்மதியும் ஆறுதலும் கிடைக்க ஆரம்பித்தது என்றால் ஹுஸூர் அவர்களது உண்மை தொடர்பாக எனக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. அதிகமதிகம் ஈமான் அதிகரித்துக் கொண்டே சென்றது.

பிறகு நான் முதல் முறையாக காதியான் சென்று ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக மியான் கைருத்தீன் சாஹிபுடன் வந்தேன். நான் ஹுஸூர் அவர்களை சந்தித்தேன். அப்போது எனது உள்ளம் எத்தகைய நிம்மதி மற்றும் ஆறுதலுக்கான சாட்சி பகர்ந்தது என்றால், இந்த தோற்றம் பொய் கூறக்கூடிய ஏமாற்றக்கூடிய ஒருவரின் தோற்றமாக தெரியவில்லை என்று அது கூறியது. அப்போது நான் மியான் கைருத்தீன் சாஹிபிடம் இதற்கு முன்பும் நான் ஹுஸூர் தொடர்பாக அவமரியாதையாகவோ தரக்குறையாகவோ ஒரு சொல்லைக்கூட

சொன்னதில்லை. நான் அறியாமல் அவ்வாறு ஏதாவது கூறியிருந்தால் நான் தவ்பா செய்கின்றேன். இந்த தோற்றம் பொய் கூறுபவருடைய தோற்றம் அல்ல என்று நான் கூறினேன்.

இதுவே பிறகு இவரது பைஅத்திற்கு காரணமாக ஆகிவிட்டது. இந்த நல்லெண்ணம்தான் அசல் விசயமாகும். அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். இதன் பக்கமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை கவனமூட்டியுள்ளார்கள். எனது நூல்களை படியுங்கள். நல்லெண்ணத்துடன் படியுங்கள் என்று கூறினார்கள். மவ்லவிகளும் இந்த நூல்களைப் படிக்கின்றனர் என்றாலும் ஆட்சேபனைகளைச் செய்வதற்காக படிக்கின்றனர். தீய எண்ணங்களைத் தவிர இவர்களது மூளைகளில் வேறு எதுவும் இருப்பதில்லை. தூய்மையானவர்களே தன்னைப் புரிந்து கொள்ள முடியும் என்று திருக்குர்ஆனே வாதம் செய்யும் போது அதற்கு எதிரில் வேறு நூல்களுக்கு என்ன தகுதி இருக்க முடியும்? எவ்வாறிருப்பினும் இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது 150 ஆண்டுகளுக்கு முன்னால் அல்லது இதற்கு முன் எப்போதும் இந்த மவ்லவிமார்களின் நிலை எவ்வாறு இருந்ததோ அவ்வாறே இன்றும் இருக்கின்றது.

**ஹஸ்ரத் டாக்டர் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

எனக்கு ஏறக்குறைய 18 அல்லது 19 வயது இருக்கும். 1903 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கனவில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தேன். இதற்கு முன் நான் ஹுஸூரை ஒருபோதும் பார்த்ததில்லை. நீங்கள் யாருடைய சீடர்? என ஹுஸூர் என்னிடம் கேட்டார்கள். நான் ஜனாப் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சீடர் ஆவேன் என்று கூறினேன். இதற்குப் பிறகு எனக்கு ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் மற்றும் திரியாகுல் குலூப் ஆகிய நூல்களைப் படிக்க நேர்ந்தது. அதைப் படித்ததும் எனது இயல்பு அஹ்மதிய்யா இயக்கத்தின் பக்கம் திரும்பியது. 1906 ஆம் ஆண்டு நான் இஸ்திகாரா செய்தேன். லாயல்பூர் மாவட்டத்திலுள்ள கோஜ்ராவில் நான் பணிபுரிந்து வந்தேன். சுபுஹ் தொழுகைக்குப் பிறகு நான் முற்றிலும் விழித்திருக்கும் நிலையில் கஷ்ஃப் காட்சியில் மாடிப்படிகள் எனக்கு காட்டப்பட்டது. ஒவ்வொரு படியிலும் போர்டு வைக்கப்பட்டிருந்தது. இறுதிப் படிக்கு இடையில் சிவப்பு நிறத்தில் வெள்ளை நிற சொற்கள் அடங்கிய ஒரு போர்டு தென்பட்டது. அதில் தடித்த எழுத்துக்களில் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி வாக்களிக்கப்பட்ட மஸீஹும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் ஆவார் என எழுதப்பட்டிருந்தது.

கூறுகின்றார்கள்: 1907 ஆம் ஆண்டு ஸியால்கோட் மாவட்டத்திலுள்ள ரெயியாவில் நான் எனது மாமனார் வீட்டிற்குச் சென்றேன். எனது மாமனார் அங்கு ஒரு பொறுப்புள்ள தாசில்தாராக இருந்து வந்தார். எனது மதிப்பிற்குரிய மர்ஹூம் டாக்டர் அப்துஸ் ஸத்தார் ஷா சாஹிபுடன் எனது சந்திப்பு ரெயியாவிலுள்ள மருத்துவமனையில் வைத்து ஏற்பட்டது. நான் அவருடன் சேர்ந்து காதியான் சென்றேன். ளுஹர் நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்தேன். 1903 ஆம் ஆண்டு நான் கனவில் ஹுஸூர் அவர்களின் அங்க அடையாளங்களைப் பார்த்திருந்தேன். அதே தோற்றத்தில் இப்போது நான் அவர்களைப் பார்த்தேன். ஆடையும் அவ்வாறே இருந்தது. அது இவரது பைஅத்திற்கு காரணமாக ஆகிவிட்டது.

**குஸாப் என்ற ஊரைச் சேர்ந்த உமர் கத்தாப் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் பருவ வயதை அடைந்ததும் இறைவன் புறமிருந்து நான் நியமிக்கப்பட்டுள்ளேன் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தை நான் கேள்விப்பட்டேன். எந்த அளவுக்கு விரைவாக செல்ல முடியுமோ அந்த அளவுக்கு விரைவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னிலையில் சென்று பைஅத் செய்யும் நற்பாக்கியத்தைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் உருவானது. இறைவனின் அருளால் 1905 ஆம் ஆண்டில் எனது உள்ளத்தின் எண்ணத்திற்கேற்ப காதியான் சென்று சேர்ந்தேன். ஒரு சிறிய ஊராக அது இருந்தது. பூசப்படாத சுவர்களை உடைய விருந்தினர் விடுதி இருந்தது. சில மாணவர்கள் படித்து வந்தனர். அவர்களுக்கு நூருத்தீன் அஃஸம் – மகத்தான நூருத்தீன் ஆன மவ்லானா ஹகீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தார்கள். அது எனது பார்வையில் தென்பட்டது.

சிறிய ஊர், பூசப்படாத சுவர்களை உடைய விருந்தினர் விடுதி, சில மாணவர்கள் என்று கூறி காதியானின் வரைபடத்தை இவர் நம் முன்னால் கொண்டு வருகின்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதம் அந்த சமயத்தில் அவரை சென்று சேர்ந்தது.

கூறுகின்றார்கள்: இவ்வளவு பெரிய வாதம்! இப்போது இருக்கின்ற இந்த சிற்றூர் ஆகியவற்றை பார்க்கும் போது வியப்பு ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருந்தன.

அதாவது இவ்வளவு பெரிய வாதம், அதற்கு எதிரில் சிற்றூரின் நிலைமை இவ்வாறு இருக்கின்றது. இதில் எனக்கு வியப்பு என்றே இவர் கூறுகின்றார். வியப்பு ஏற்படத்தான் செய்யும். உறுதி ஏற்பட முடியாது. அவ்வாறிருந்தும் உள்ளம் உண்மைக்கு சாட்சியாக இருந்தது என்று அவர் கூறுகின்றார். இந்த எல்லா விசயங்களையும் பார்த்த பிறகும் கூட இவரது வாதம் கண்டிப்பாக உண்மையானது என்ற விசயத்தில் அவருக்கு உறுதி ஏற்பட்டது.

கூறுகின்றார்கள்: லப்பைக் என்று கூறியவாறு மவ்லவி சாஹிப் அவர்களை அதாவது முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்திக்காமலேயே நான் ஒரு துண்டுச் சீட்டு எழுதி ஹுஸுரிடம் கொடுக்கும்படி உள்ளே கொடுத்து அனுப்பினேன். ஹுஸுர் தாங்கள் வெளியே வரவும்! நான் பைஅத் செய்ய வேண்டும். இன்றே திரும்பிச் செல்ல இருக்கின்றேன் என்று எழுதியிருந்தேன்.

ஹுஸுர் அவர்கள் எனக்கு எழுத்து வடிவில் பதில் அனுப்பியிருந்தார்கள். அதில், தற்போது தலை முடிக்கு சாயம் பூசப்பட்டுள்ளது. இப்போது ஒரு மணிக்கு பாங்கு சொல்லப்படும். ளுஹர் தொழுகைக்காக நான் மஸ்ஜிது முபாரக் வருவேன் என்று எழுதியிருந்தார்கள். இந்த தருணத்தில் சீக்கியர்களான இருவர் விருந்தினர் விடுதிக்கு ஓடி வந்தனர். அப்போது என்னைத் தவிர அங்கு வேறு யாரும் இருக்கவில்லை.

முடி வெட்டுபவரை விரைவாக அழைத்து வாருங்கள். முடி வெட்ட வேண்டும். பைஅத் செய்ய வேண்டும் என்று அவர்கள் என்னிடம் கூறினர். எனக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது என்று நான் கூறினேன். முடி வெட்டுபவர் கிடைப்பதும் மிகவும் சிரமமாக இருந்தது. இவர்களது வருகை பற்றியும் தகவல் தெரிவித்து துண்டுச்சீட்டு எழுதி நான் ஹுஸுர் அவர்களுக்கு கொடுத்து அனுப்பினேன். ஹுஸுர் இதற்கும் ஏற்கனவே கூறிய பதிலை தந்திருந்தார்கள்.

இந்த எளியவன் அவர்களிடம் காணப்படும் பதட்டமான நிலை பற்றி அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் நாங்கள் இரு சகோதரர்கள் காதியானுக்கு அருகில் வசித்து வருகின்றோம். மியான் மெயில் இராணுவச் சாவடியில் பணிபுரிந்து வருகின்றோம். தந்தையார் நோய்வாய்ப்பட்டதால் வீட்டிற்கு வந்தோம். அவருக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது. எங்களது சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் எனது தந்தையிடம் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்ற கலிமாவை ஓதுங்கள். அதனால் உங்களது உயிர் பிரியட்டும் என்று கூறினார். அவர்கள் அவ்வாறே ஓதினார்கள். அவர்களது உயிர் பிரிந்தது.

இதனால் எங்களுக்கு எத்தகு தாக்கம் ஏற்பட்டது என்றால் கடைசி நேரத்தில் ஓதுவதற்குப் பதிலாக இந்த கலிமாவை முதலிலேயே நாம் ஓத வேண்டும் என்று நாங்கள் கருதினோம். மிர்ஸா சாஹிப் வாதம் புரிந்திருந்தார்கள். அடுத்த நாள் இவர்கள் அதாவது இந்த சீக்கியர்கள் பெண்களையும் தங்களுடன் இந்நிகழ்ச்சியில் பங்கு பெறும்படி அழைத்தனர். ஆனால் அவர்கள் கூச்சலிடத் தொடங்கினர். சீக்கிய சமுதாயத்தினர் அங்கு ஒன்று கூடினர். நாங்கள் இவர்களிடமிருந்து தப்பித்து காதியானுக்கு ஓடி வந்தோம். அவர்கள் தடிகளையும், கம்புகளையும் எடுத்துக் எங்களைச் சுற்றி வளைத்துக் கொள்வதற்காக வருகின்றனர். எனவே விரைவாக செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

கூறுகின்றார்கள்: இந்தத் தருணத்தில் பாங்கு சொல்லப்பட்டது. நானும் இந்த நபர்களுடன் சேர்ந்து மஸ்ஜிது முபாரக்கிற்கு சென்று சேர்ந்தேன். சிறிய பள்ளிவாசல் எந்த அளவு நிரம்பி இருந்தது என்றால் அணுவளவு இடம் கூட அங்கு இருக்கவில்லை. இரு சீக்கிய சகோதரர்களின் சம்பவத்தை இவர்கள் கூறியுள்ளார்கள். இதுபற்றி

இவர்கள் யார்? பிறகு இவர்கள் அஹ்மதிகளாக ஆனார்களா? இல்லையா? என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் படி நான் கூறியிருந்தேன். எவ்வாறிருப்பினும், இவர்கள் தமது சம்பவத்தில் இதுபற்றி எழுதியிருக்கின்றார்கள்.

கூறுகின்றார்கள்: நாங்கள் பள்ளிவாசலை அடைந்த போது அங்கு எங்குமே எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை. காலணிகள் வைக்கும் இடத்தில் வியப்புடன் நின்று கொண்டிருந்தோம். யாரைப் பற்றியும் எங்களுக்கு தெரியாது. இந்நிலையில் ஹஸ்ரத் சாஹிப் மிஹ்ராப் பக்கம் கதவைத் திறந்தார்கள். மக்கள் எழுந்து நின்றனர். இந்த எளியவன் மக்களது கால்களை கடந்து சென்றவாறு ஹுஸூர் அவர்களுக்கு முன்னால் சென்று நின்றேன். ஹுஸூர் அமர்ந்தார்கள். இந்த எளியவன் ஹுஸூருக்கு முன்னால் அமர்ந்தேன். ஹுஸூர் நீங்கள் யார்? என்று கேட்டார்கள். பைஅத் செய்வதற்காக வந்துள்ளோம் என்று நாங்கள் கூறினோம். நான் தான் துண்டுச்சீட்டு எழுதி அனுப்பினேன் என்று கூறினேன்.

எங்களுக்கு முன்னதாக பைஅத் செய்வதற்காக வந்து அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து மவ்லவி சாஹிப் பைஅத் செய்யும்படி கூறினார்கள். இந்த எளியவனின் கையைப் பிடித்து தனது கைகளில் வைத்தவாறு இந்த சிறுவன் மீது கை வையுங்கள் என்று ஹுஸூர் கூறினார்கள். ஹுஸூர் அவர்களின் கட்டளைக்கிணங்க எல்லாரும் எனது முதுகின் மீது கையை வைத்தனர். பைஅத் நடந்தது. ஹுஸூர் துஆ செய்தார்கள். பிறகு தொழுகை நடந்தது.

**ஹஸ்ரத் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் அஹ்மதி பென்சனர் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில மாதங்கள் லூதியானாவில் தங்கியிருந்தார்கள். அப்போது எனக்கு ஏறக்குறைய 17 அல்லது 18 வயது இருக்கும். அது எனது மாணவப் பருவத்தின் காலகட்டமாக இருந்தது. நான் பலமுறை ஹுஸூர் அவர்கள் முன்னால் ஆஜரானேன். ஹுஸூர் அவர்களது முகத்திலிருந்தும் வழிந்து கொண்டிருந்த அந்த ஒளி எனக்கு தெரிந்தது. அதன் காரணமாக எனது உள்ளம் இது பொய்யரின் முகம் அல்ல என்பதை வலுக்கட்டாயமாக கூற வைத்தது. அக்கம் பக்கத்திலிருந்த மவ்லவிகள் தன்னை சந்தேகத்தில் ஆழ்த்தினர். இந்த சமயத்தில் ஹுஸூர் அவர்களுக்கும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவிக்கும் இடையில் லூதியானாவில் வைத்து விவாதம் நடைபெற்றது. அதில் நான் கலந்து கொண்டேன். அதற்கு பிறகு இறைவன் எனது நேர்வழிக்காக இஸாலே அவ்ஹாம் என்ற நூலின் இரு பாகங்களையும் அனுப்பி தந்தான். அது முழுக்க முழுக்க ஒளி மற்றும் நேர்வழியால் நிரம்பியிருந்தது. இறைவனுக்கு தெரியும். நான் பெரும்பாலான நேரங்களில் முழு இரவும் தூங்காமலேயே இருந்து வந்தேன். நூல்கள் மீது தலையை வைத்தவாறு சிற்றுரக்கம் ஏற்பட்டால் தூங்குவேன். இல்லையென்றால் நூலைப் படித்துக் கொண்டேயிருப்பேன். இறைவா! இது என்ன விசயம்? மவ்லவிமார்கள் ஏன் திருக்குர்ஆனை கைவிட்டு விடுகின்றார்கள்? என்று கூறியவாறு அழுது கொண்டேயிருப்பேன். தக்வா இருந்தால் பிறகு இப்படிப்பட்ட நிலையில்தான் மனிதன் நூலைப் படிப்பான்.

கூறுகின்றார்கள்: இறைவன் அறிவான். எனது உள்ளத்தின் பேரன்பின் நெருப்புச் சுவாலை அதிகரித்துக் கொண்டே சென்றது. நான் மவ்லவி ரஷீது அஹ்மது கல்கோயிற்கு மிர்ஸா சாஹிப் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை திருக்குர்ஆனிலுள்ள 30 வசனங்கள் மூலம் நிரூபிக்கின்றார்கள். நீங்கள் தயவுகூர்ந்து ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள் என்பதற்கான திருக்குர்ஆன் வசனங்களையும் நபிமொழிகளையும் எழுதுங்கள். அத்துடன் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எழுதியுள்ள 30 திருக்குர்ஆன் வசனங்களை மறுத்து எழுதி அதை எனக்கு அனுப்பி வையுங்கள். நான் அதை வெளியிடுவேன் என்று கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு நீங்கள் ஈஸாவின் மரணம், உயிரோடிருப்பது ஆகியவற்றைப் பற்றி மிர்ஸா சாஹிபிடமோ அல்லது அவர்களது சீடர்களிடமோ கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டாம். ஏனென்றால் பெரும்பாலும் ஈஸா (அலை) அவர்களது மரணம் பற்றி கூறுகின்ற வசனங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. இது கருத்து வேறுபாடுள்ள விசயமாகும். எனவே மிர்ஸா சாஹிப் எப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றார் என்பதை பற்றி விவாதம் செய்யுங்கள் என்று அவர் பதில் எழுதியிருந்தார்.

ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்களா? அல்லது உயிரோடு இருக்கின்றார்களா? என்பதைப் பற்றி விவாதம் செய்யக் கூடாது. மிர்ஸா சாஹிப் எவ்வாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றார் என்ற விசயத்தைப் பற்றி விவாதம் செய்ய வேண்டும் என்று இவர் கூறுகின்றார். ஏனென்றால், திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபிக்கின்றது. அதற்கு ஆதரவாக நிற்கின்றது.

கூறுகின்றார்கள்: நான் அவருக்கு பதில் எழுதியவாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்றால், ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் ஆவார்கள் என்று எழுதினேன். அதற்கு அவர் உங்கள் மீது மிர்ஸா சாஹிபின் தாக்கம் ஏற்பட்டு விட்டது. நான் துஆ செய்வேன் என்று பதில் வந்தது. அதற்கு நான் நீங்கள் உங்களுக்காக துஆ செய்யுங்கள் என்று எழுதினேன். இறுதியாக நான் இறைவன் முன்னால் வீழ்ந்தேன். எனது உள்ளம் கண்ணீரால் வழிந்தோடியது. நான் இறைவனது அர்ஷின் கால்களை அசைத்து விட்டேன். இறைவா! உனது திருப்தி எனக்கு தேவை. நான் உனக்காக ஒவ்வொரு கண்ணியத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றேன். உனக்காக ஒவ்வொரு இழிவையும் ஏற்றுக் கொள்வேன். என் மீது கருணை காட்டுவாயாக! என்று இறைவனிடம் வேண்டினேன். எந்த இறைவனின் பிடியில் எனது உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். சிறிது நேரம் கழிந்ததும் அதிகாலை ஏறக்குறைய 4.00 மணிக்கு 1893 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் தேதி திங்கள்கிழமை அன்று எனக்கு ஜனாப் ஸய்யதுனா முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஸியாரத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

கனவு இதுவாகும். நான் பேர்மி என்ற இடத்தில் அஸர் தொழுகைக்காக உளூ செய்து கொண்டிருந்தேன். கனவை விளக்கமாகக் கூறுகின்றார். யாரோ ஒருவர் என்னிடம் வந்து ரஸூலே அரபி (ஸல்) அவர்கள் வந்துள்ளார்கள். அவர்கள் இந்த நாட்டிலேயே இருப்பார்கள் என்று கூறினார். நான் எங்கே? என்று கேட்டேன். அதற்கு அவர் அந்தக் கூடாரங்கள் ஹுஸூருடையதாகும் என்று கூறினார். நான் விரைவாக தொழுகையை நிறைவேற்றிய பிறகு அங்கு சென்றேன். ஹுஸூர் தகவல் தரப்பட்டிருந்தாலும் ஹுஸூர் அவர்கள் அந்த இடத்திலிருந்து புறப்படும்படி கட்டளையிட்டிருந்தார்கள். நான் அழுதவாறு ஹுஸூர் நீங்கள் இங்கிருந்து செல்கின்றீர்களா? நான் உங்களை எப்படி சந்திக்க முடியும்? என்று கேட்டேன். எனது தோளின் மீது ஹுஸூர் அவர்கள் தனது அருளுக்குரிய கையை வைத்து பதற்றமடைய வேண்டாம். நாமே உங்களை சந்திப்போம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்கள் தான் ரஸூலே அரபி ஆவார்கள் என்று இந்தக் கனவின் மூலம் எனக்கு தெரிய வந்தது. செயலளவில் இது எனக்கு புரிய வைக்கப்பட்டது.

நான் பைஅத்திற்கான கடிதம் எழுதினேன். 1898 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி செவ்வாய்கிழமை அன்று காதியானிற்கு வந்து மக்ரிப் தொழுகைக்குப் பிறகு பைஅத் செய்யும் நற்பாக்கியம் எனக்கு கிடைத்தது. இறைவனது அருள் எனக்கு எத்தகைய நிலைநிற்கும் தன்மையை வழங்கியது என்றால், எந்தவொரு துன்பமும் என்னை வீழ்ச்சியில் ஆழ்த்த முடியவில்லை. இவையெல்லாம் ஹுஸூர் அவர்களின் நட்பின் விளைவாகவே கிடைத்தது. அது மீண்டும் மீண்டும் எனக்கு கிடைத்தது. இந்த கைகளுக்கு ஹுஸூர் அவர்களின் முழங்கால்களைப் பிடித்து விடுகின்ற பெருமை கிடைத்துள்ளது. அதாவது கால்களை அமுக்கி விடுவதற்கான நற்பேறு கிடைத்துள்ளது.

எனது பைஅத் தொடர்பான அறிவிப்பு செய்யப்பட்டதும் பல்வேறு விதமான துன்பங்கள் எனக்கு இழைக்கப்பட்டாலும் இறைவன் என்னை பாதுகாப்பாக வைத்ததுடன் மட்டுமல்லாமல் இந்த இழப்பை விட அதிகமாக எனக்கு அருட்கொடைகளை வழங்கினான். எனது தந்தையார், சகோதரர், நெருக்கமான உறவினர்கள் ஆகியோர் அஹ்மதிகளாக ஆகிவிட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ் மின் ஸாலிக்.

எழுதுகின்றார்கள்: விசயம் நீளமாகி விடும் என்ற அச்சம் எனக்கு இல்லாமல் இருந்திருந்தால் இன்னும் சில சம்பவங்களை நான் எழுதியிருப்பேன். இதுவும் நான் குறிப்பிட வேண்டிய ஒரு விசயமாக இருக்கின்றது. நான் அஹ்மதியான பிறகும் கூட துரூது தாஜ் ஓதி வந்தேன். இவர்கள் பல்வேறு வகையான துரூதுகளை உருவாக்கியுள்ளனர். இதுவும் துரூதின் ஒரு வகையாகும். லூதியானாவைச் சேர்ந்த மவ்லவி அப்துல் காதிர் சாஹிப்

அவர்கள் எனக்குப் பிறகு அஹ்மதியாகி இருந்தார்கள். அவர்கள் என்னிடம் இது ஷிர்க் ஆகும். இதை ஓத வேண்டாம் என்று கூறி என்னை தடுத்தார்கள். அதற்கு நான் இதை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மூலமாக கூற வையுங்கள். பிறகு நான் இதை விட்டு விடுவேன் என்று கூறினேன். தற்செயலாக ஓர் ஆண்டு மாநாட்டின் சமயத்தில் இந்த எளியவனும் மவ்லவி சாஹிபும் ஒன்றாக இருந்தோம். ஹுஸூர் காற்று வாங்குவதற்காக – உலாவுவதற்காக வெளியில் வந்தார்கள். அப்போது மவ்லவி சாஹிப் ஹுஸூரிடம், ஹுஸூர்! முன்ஷி ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் துரூது தாஜ் ஓதுகின்றார். நான் இது ஷிர்க் என்று கூறி தடை செய்தேன். ஹுஸூர் என்னைப் பார்த்தவாறு இது என்ன? என்று கேட்டார்கள். அதாவது துரூது தாஜ் ஓதுங்கள். நீங்கள் ஓதுகின்ற அந்த துரூது என்ன? என்பதை எனக்கு கூறுங்கள் என்று கேட்டார்கள். நான் அதனை ஓதிக் காண்பித்தேன். அப்போது இதில் ஷிர்க் இல்லை என்று ஹுஸூர் கூறினார்கள். மவ்லவி சாஹிப் இதில், துன்பங்களை, நோயை அகற்றுபவர், பஞ்சத்தை, நோயை வேதனையை அகற்றுபவர் என்ற சொற்கள் வருகின்றன என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹுஸூர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதியை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களது பெயர் தாஃபிஉல் பலா வல் வபா – துன்பங்களை அகற்றுபவர் நோயை நீக்குபவர் ஆகும் என்பதில் என்ன சந்தேகம் உள்ளது? என்று கேட்டார்கள்.

பிறகு ஹுஸூர் இது தொடர்பாக நீண்ட உரை நிகழ்த்தினார்கள். இதனால் மவ்லவி சாஹிபும் மகிழ்ச்சி அடைந்தார்கள். பிறகு எல்லாரும் பயனடைய வேண்டும் என்பதற்காக அவர்கள் கூறியவற்றை எழுதினார்கள். கட்டுரையை பிறகு எழுதினார்கள்.

**ஹஸ்ரத் ஸய்யது மஹ்மூது ஆலம் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

1903 ஆம் ஆண்டில் எனது மூத்த சகோதரர் ஸய்யது மஹ்பூப் ஆலம் அவர்கள் பாட்னா நகரில் எங்கோ ஓரிடத்திற்கு சென்று கொண்டிருந்த போது ஒரு நபர் அவரிடம் பஞ்சாபில் ஒருவர் தாம் மஹ்தி என்று வாதம் புரிந்துள்ளார் என்று கூறிவிட்டு சென்று விட்டார். எனது சகோதரருக்கு சிறு வயதிலிருந்தே திருக்குர்ஆன் மீது அன்பு இருந்தது. எனவே இதை கேட்டதும் அவர் வியப்புடன் இருந்து விட்டார். இதைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் யாரிடம் கேட்பது? என்று நினைத்தார். கூறிக்கொண்டிருந்தவர் சென்று விட்டார். ஒருவேளை இதுபற்றி ஸ்டேஷன் மாஸ்டருக்கு தெரியலாம் என்று அவர் நினைத்தார். அவர் நினைத்தது சரியாக இருந்தது. அவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்றார். அவரிடம் பெயர், முகவரி ஆகியவற்றை கேட்டு தெரிந்த பிறகு அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதில் எனக்கு உங்களது நிலைமைகள் பற்றி தெரியாது. உங்களது பெயரை மட்டுமே கேள்விப்பட்டேன். தயவு செய்து நீங்கள் உங்களது நூல்களை எனக்கு அனுப்பித் தந்தால் நான் அதை படித்து விட்டு உங்களிடம் திருப்பித் தந்து விடுவேன் என்று எழுதியிருந்தார். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் நூல்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். எனது சகோதரர் அவற்றை படித்து விட்டு திரும்ப கொடுத்து விட்டார். மக்கள் அப்போதிருந்தே அவரை எதிர்க்க ஆரம்பித்தனர். ஆனால் சகோதரர் அவர்கள் உறுதியாக நிலைநின்றவாறு சிறிது காலம் கழிந்த பிறகு பைஅத் செய்து விட்டார். நானும் சிறிது காலம் கழிந்த பிறகு எனது சகோதரர் மூலமாக நூல்களைப் படித்தேன். பிறகு பைஅத் செய்து விட்டேன்.

அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு சில காலம் முன்பாக நான் நகரத்திலிருந்து வீட்டிற்கு சென்றேன். அங்கு தற்செயலாக தந்தையாருடன் தூங்கினேன். கனவில் தந்தையாரிடம் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் உன்னுடன் தூங்கிக் கொண்டிருக்கும் இந்த சிறுவன் மிகப்பெரிய வக்கீலாக ஆகி விடுவான் என்று கூறினார்கள். அப்போது நான் எனது தந்தையாரிடம் இந்தக் கனவுக்கான விளக்கம் நான் அஹ்மதி ஆவதுதான். பெரிய மனிதராக ஆவதாக நீங்கள் கனவில் பார்த்தது நிறைவேறி விட்டது என்று கூறினேன்.

கூறுகின்றார்கள்: இரண்டு வருடங்களாக தொடர்ச்சியாக ஒரு அபாயகரமான நோயால் நான் பாதிப்பிற்கு ஆளானேன். மிக நீண்ட காலமாக இந்த நோய் நீடித்தது. இரண்டு வருடங்கள் வரை இந்த நோய் நீடித்தது. மிகவும் அபாயகரமான நோயாக அது இருந்தது. இந்த நோயிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான நிலையை அடைவதற்கு

முன்பாகவே காதியான் செல்வதற்கான பேரார்வம் இன்னும் சொல்வதென்றால் அவ்விசயத்தில் ஒரு பைத்தியமே பிடித்திருந்தது.

நேசமே! நீ வியக்கத்தக்க அடையாளங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்தி விட்டாய். காயத்தையும் அதற்கான சிகிச்சையையும் நீ ஒன்றாக்கி விட்டாய். நேசமானது எத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்தின என்றால் தனது அன்பர் மீது கொண்ட நேசத்தின் காரணமாக காயமும் அதற்கான சிகிச்சையையும் சமமானதாக ஆக்கி விட்டது.

கூறுகின்றார்கள்: எனது சகோதரர் என்னிடம் மிகவும் பிடிவாதமாக காதியானில் பொக்கிஷம் ஒன்றுமில்லை. நான் காதியான் செல்வதற்காக எண்ணம் வந்ததும் எனது சகோதரர் என்னிடம் நீ காதியான் சென்றே ஆக வேண்டும் என்றிருந்தால் மெட்ரிக் தேர்வு எழுதி அதில் தேர்வான பிறகு செல்லுங்கள். அதனால் அங்கு சென்ற பிறகு சிரமம் இருக்காது என்று கூறினார். பெற்றோர்கள் அஹமதியல்லாதவர்களாக இருந்தனர். அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. பயணத்திற்கு தேவையானவற்றை தருவதற்கு சகோதரரும் தயாராக இல்லை. பெற்றோர்களும் தயாராக இல்லை. நோயின் காரணமாக எனது உடல் மிகவும் பலவீனமாக ஆகிவிட்டது. இரண்டு அல்லது நான்கு மைல்கள் செல்வதற்கான சக்தி என்னிடம் இருக்கவில்லை. ஒரு மைல் செல்வதற்கான சக்தி கூட என்னிடம் இல்லை என்று கூறலாம். ஆனால் இறைவன் எனது உள்ளத்தில் உணர்வை ஏற்படுத்தினான். நான் நடந்து செல்வதற்கு தயாராகி விட்டேன்.

அந்த சமயத்தில் நான் பாட்னாவில் இருந்தேன். செல்லும் போது பெற்றோர்களை சந்தித்து விட்டு செல்லும்படி மக்கள் ஆலோசனை கூறினார்கள். ஆனால் நான் அதை மறுத்து விட்டேன். எனது தாயாரின் அழுகை மற்றும் முறையீட்டின் காரணமாக எனது பாதங்கள் உறுதியாக நிலைத்திருப்பதிலிருந்தும் விலகி விடலாம். அதன் காரணமாக காதியான் செல்வதற்கான எனது எண்ணத்தை நான் கை விட்டு விடலாம். எவ்வாறிருப்பினும் நான் நடக்க ஆரம்பித்தேன். நடந்து கொண்டிருந்தேன். அவ்வாறு நான் செல்ல ஆரம்பித்த போது வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு ஒரு போஸ்ட் கார்டு எழுதினேன். எனது பயணத்தின் நிலைமைகள் இவ்வாறு இருக்கின்றது. எனக்காக துஆ செய்யுங்கள் என்று எழுதியிருந்தேன். என்னிடம் பைசா எதுவுமில்லை. உடல்நலம் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. ஆனால், நான் பயணத்திற்காக தயாராகி விட்டேன். மிகவும் பலவீனமானவனாக நான் உள்ளேன் என்று எழுதியிருந்தேன். இன்னொரு கார்டு சகோதரருக்கும் எழுதினேன். எனது சகோதரர் வேறு இடத்தில் இருந்தார். நான் செல்கின்றேன். காதியான் வரை சென்று சேர்ந்தால் கடிதம் எழுதுவேன். வழியில் நான் மரணித்து விட்டால் எனது சடலம் தொடர்பாக யாருக்கும் எதுவும் தெரியாமல் ஆகிவிடும் என்று எழுதியிருந்தேன்.

கூறுகின்றார்கள்: நான் மிகவும் பலவீனமாக இருந்தேன். ஆனால் கடக்க வேண்டிய தூரம் மிக அதிகமாக இருந்தது. இதனால் 50 அல்லது 60 மைல்கள் வரை இரயிலில் பயணம் செய்தேன். ஆரோக்கியம் பலவீனமாக இருந்ததால் எனது உறுதிப்பாட்டில் பலவீனம் ஏற்பட்டதால் 60 அல்லது 70 மைல்கள் கடந்த பிறகு திரும்பி வருவதற்கான தைரியம் இருக்காது என்று நான் கருதினேன். இவ்வாறு திரும்பி வருவதற்குப் பதிலாக முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பேன்.

கூறுகின்றார்கள்: இந்த பயணத்தில் நாள்தோறும் நான் 30 மைல்கள் நடந்தேன். எங்கு இரவு வந்து விடுமோ அங்கு தங்கி விடுவேன். சில நேரங்களில் ஸ்டேஷனிலும் சில நேரம் நடமாட்டமில்லாத பகுதிகளிலும் தங்குவேன். பாதங்கள் காயமுற்றிருந்தன. இறைவா! எனது கண்ணியத்தை நிலைநிறுத்துவாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! என துஆ செய்து வந்தேன். இரவை கழிப்பதற்காக ஏதாவதொரு இடத்தில் தங்கும்போது மிகுந்த வேதனையின் காரணமாக எனது கால்களை அது இருந்த இடத்திலிருந்து என்னால் அசைக்க முடியாமல் இருந்தது. சுபுஹ் நேரம் வந்ததும் தொழுது விட்டு நடப்பதற்காக பாதங்களை எடுத்து வைப்பேன். கால்கள் அது இருந்த இடத்திலிருந்தும் அசையாமல் இருந்தன. ஆயிரக்கணக்கான கஷ்டங்களை சகித்தவாறு அவற்றை அசைப்பேன். ஆரம்பத்தில் மிகவும் மெதுவாக பாதங்களை எடுத்து வைப்பேன். சில நிமிடங்கள் கழிந்த பிறகு

முழுமையாக விரைவாக நடக்கும் நிலைக்கு வந்து விடுவேன். கால்கள் ஷு அணிவதற்கு தகுதியற்றதாக இருந்தது. அவை வெடிப்புகளால் நிரம்பியிருந்தன.

இன்னும் சொல்வதென்றால் தோல் உரிக்கப்பட்ட நிலையில் அவற்றில் மாமிசம் மட்டுமே இருந்தது. காதியான் செல்வதற்கான பேரார்வம் இருந்தது. அதனால் இவர் நடந்தே சென்று கொண்டிருந்தார். இதனால் சில நேரங்களில் கற்களும் முட்களும் குத்தும்போது அது உடலை நடுங்க வைத்து விடும். சில நேரங்களில் தண்டவாளத்தில் நடந்து செல்வேன். சில நேரங்களில் பொதுவான வழிப்பாதையில் இறங்கி நடப்பேன். மிகவும் அச்சத்தை தரக்கூடிய இடங்களை கடந்து செல்ல வேண்டியது வந்தது. ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் இருந்த குரங்குகளையும், கருப்பு முகமுடைய வால் இல்லா குரங்குகளையும் சந்திக்க நேர்ந்தது. அதன் அபாயகரமான தோற்றம் உள்ளத்தை நடுக்க செய்யும். அலிகர் நகரத்தைக் கடந்து சென்றேன். அது எப்படி இருந்தது? என்று கூட எனக்கு தெரியாது. ஏனென்றால் எனது நோக்கம் ஒன்றுதான். அதற்காகவே நான் நடந்து கொண்டிருந்தேன். கல்லூரி கட்டடம் எப்படி இருக்கும்? என்று எனக்கு தெரியாது. எப்படியிருப்பினும் நடந்து கொண்டிருக்கும் நிலையில் வலது பக்கத்தில் சில வெண்ணிற கட்டடங்கள் தெரிந்தன. பக்கத்தில் நடந்து சென்றவரிடம் இது என்ன கட்டடம்? என்று கேட்ட போது இது கல்லூரியின் கட்டடம் என்று அவர் சொல்லும் போதே தொடர்ந்து நடந்து கொண்டிருந்தேன். தில்லி நகரத்தையும் கடந்து சென்றேன். ஆனால் ஒரு நிமிடத்திற்குக் கூட நான் அங்கு தங்கவில்லை. ஏனென்றால் எனது நோக்கம் வேறு நோக்கமாகும். அங்கு இருக்கும் சான்றோர்களை ஸியாரத் செய்வது எனது நோக்கமல்ல. எனவே நான் ஒரு நொடிப் பொழுதுகூட எனது நோக்கத்திலிருந்தும் வெளியே வர விரும்பவில்லை.

காயப்பட்ட பாதங்களுடன் காதியான் வந்து சேர்ந்தேன். விருந்தினர் விடுதியில் தங்கினேன். சில நிமிடங்கள் கழிந்த பிறகு மர்ஹூம் ஹஸ்ரத் ஹாபிஸ் ஹாமிது அலி சாஹிப் (ரலி) அவர்கள், பால் இருந்த ஒரு டம்ளரை எனக்கு தந்தார்கள். என்னிடம் பைசா இல்லாமல் இருந்ததால் நான் அதை பெற்றுக் கொள்ள மறுத்து விட்டேன். செலவுகள் குறித்து அஞ்ச வேண்டாம் என்று இறுதியாக அவர்கள் கூறினார்கள். பைசா கொடுக்க வேண்டாம். பால் குடியுங்கள் என்று அவர்கள் கூறியதைக் கேட்டு பாலைக் குடித்தேன். அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக். காதியானில் எல்லாவற்றையும் விட முதல் உணவாக பால் கிடைத்தது. நான் அங்கிருக்கும்போதே பல மக்களும் வந்தனர். ஆனால் யாருக்கும் பால் வழங்கப்படவில்லை. எனக்கு மட்டுமே பால் இருந்த டம்ளர் கொடுக்கப்பட்டது.

கூறுகின்றார்கள்: அன்றிலிருந்து இன்று வரை நான் அறியாதவனாகவே இருக்கிறேன். பிறகு நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹை சந்தித்தேன். ஹுஸுர் எனது நிலைமைகளைப் பற்றி கேட்டார்கள். மக்கள் பைஅத் செய்ய ஆரம்பித்த போது ஹுஸுர் என்னையும் பைஅத் செய்யும்படி கூறினார்கள். நான் அப்போது ஹுஸுர் அவர்களின் கால்களை அமுக்கிக் கொண்டிருந்தேன். இந்த ஒரு பைத்தியம்தான் எனக்கு பயன்தரக்கூடியதாக இருந்தது. அவ்வாறு இல்லையென்றால் இன்று எனது பெயர் சஹாபாக்களின் பட்டியலில் எப்படி வந்திருக்க முடியும்? அல்லாஹும்ம மாலிக்கல் முல்கி துஇஸ்ஸு மன் தஸாஊ.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: முதல் கலீஃபா அவர்கள் காயங்களுக்கு சிகிச்சை வழங்கினார்கள். மர்ஹூம் ஹாபிஸ் ரோ-ன் அலி சாஹிப் அவர்களை எனக்கு கற்றுத் தருவதற்காக நியமித்தார்கள். அவர்களும் எனக்கு கற்றுக் கொடுத்தார்கள். பிறகு இவர் காதியானிலேயே தங்கி விட்டார்.

பிறகு எழுதுகின்றார்: 1908 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூர் சென்று விட்டார்கள். பிறகு முதல் கலீஃபா அவர்களையும் அழைத்துக் கொண்டார்கள். அப்போது முதல் கலீஃபா என்னையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்கள். ஹுஸுர் அவர்களின் வஃபாத் சமயத்தில் நான் அவர்களது வலது பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். லாஹூரிலிருந்து ஜனாஸாவுடன் நான் காதியான் வந்தேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தோட்டத்தில் வைத்து மக்களிடம் பைஅத் வாங்கினார்கள். நான் அந்த சமயத்தில் நார் கட்டிலில் அவர்களுடன் அமர்ந்திருந்தேன். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் அந்த

சமயத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, மேலும் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அழுதழுது மன்னிப்புக் கோரியது ஆகியவை எனது மூளையில் இப்போதும் சுற்றி வந்து கொண்டிருக்கின்றது. பைஅத் நடந்த பிறகு ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்பட்டது. தோட்டத்திலுள்ள வீட்டில் ஹஸ்ரத் சாஹிபின் உடல் ஸியாரத்திற்காக வைக்கப்பட்டிருந்தது. முகத்திலிருந்தும் துணி அகற்றப்பட்டிருந்தது. மக்கள் மேற்கிலிருந்த கதவு வழியாக வந்து ஸியாரத் செய்து விட்டு கிழக்கிலிருந்த கதவு வழியாக வெளியே சென்று விடுவர்.

இதுதான் அந்த சான்றோர்கள் தொடர்பான சில சம்பவங்களாகும். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் துடிப்புடனும் வந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டனர். ஸய்யது மஹ்மூது ஆலம் சாஹிப் அவர்களின் இந்த சம்பவம் கூட உண்மையில் நபிமொழியில் குறிப்பிட்டிருப்பது போன்று தவழ்ந்து செல்ல நேர்ந்தாலும் செல்ல வேண்டும் என்பதன் ஒரு வடிவமாக இருக்கின்றது. எந்த அளவுக்கு அவர்கள் துன்பத்தை சகித்துக் கொண்டார்கள். ஆனால் ஒரு உறுதியான எண்ணம் இருந்தது. இதன் விளைவாக அவர் சென்று கொண்டே இருந்தார். இறுதியில் தான் அடைய வேண்டிய இலக்கை அடைந்தார். அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக! நமக்கும் நமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக! மேலும் முஸ்லிம் பொதுமக்களின் நெஞ்சங்களை திறப்பானாக! அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை அடையாளம் கண்டு கொள்பவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ்வின் தகுதியைப் பெறக்கூடியவர்களாக அவர்கள் ஆகட்டும். அவர்கள் மீது படுகின்ற ஆபத்துகளிலிருந்தும் அவர்கள் தப்பித்துக் கொள்பவர்களாக ஆகட்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்திற்குரிய ஹக்கை செலுத்துபவர்களாக அவர்கள் ஆகட்டும்.

இப்போது நான் ஒரு வேதனை நிறைந்த தகவலைக் கூறுகின்றேன். இங்குள்ள பழைய அஹ்மதியான மதிப்பிற்குரிய ஹாஸிம் ஹமீது சாஹிப் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன் சவூதி அரேபியாவில் வைத்து வஃபாத் ஆகி விட்டார்கள். அவர்களது ஜனாஸா இன்று தான் வந்து சேர்ந்தது. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவருக்காக ஜனாஸா தொழுகையை நான் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். இங்கு அவர் வந்து போய்க் கொண்டிருந்தார். மிக அதிகமாக பயணம் மேற்கொண்டு வந்தார். ஆகஸ்டு 11 ம் தேதி இங்கிருந்து சவூதி அரேபியா சென்றார்கள். விமான நிலையத்தில் இறங்கியதும் இவருக்கு இதயத்தில் கோளாறு ஏற்பட்டது. நேரடியாக இவர் கிளினிக்கிற்கு சென்றார். அங்கேயே அவருக்கு திடீரென்று மாரடைப்பு வந்தது. பிறகு அங்கேயே வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

2000ம் ஆண்டில் அவர்கள் சவூதி அரேபியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். அதற்கு முன்பு வரை இங்கு தான் அவர்கள் இருந்து வந்தார்கள். பல வருடங்கள் தொடர்ச்சியாக அங்கும் அவருக்கு பல்வேறு வகையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. வழக்கமாக அவர்களிடம் சில ஜமாஅத் பொறுப்புகள் இருந்தன. அன்றாட பணிகளில் ஒன்றாக அந்த தொண்டுகள் இருந்தன. இவற்றை தவிர அங்கு இவரிடம் சில முக்கிய ஜமாஅத் பணிகளை நான் செய்ய வைத்தேன். அல்லாஹ்வின் அருளால் மிகச் சிறந்த முறையில் அவர்கள் எல்லா பணிகளையும் செய்து முடித்தார்கள். பல்வேறு சிறப்புகளின் எஜமானராக அவர்கள் இருந்தார்கள். இவரிடம் பல திறமைகள் இருந்தன. நிர்வாக விசயங்களில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்து வந்தது. டெக்னிக்கல் ரீதியாக உள்ள இடையூறுகளைப் பற்றிய அறிவும் அவருக்கு இருந்தது. அவர்களுக்கு மார்க்க அறிவும் அதிகமாக இருந்தது. வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் இவர்களது மூளையும் திறமையும் பாராட்டத் தகுந்தவையாக இருந்தது. ஆனால் மிகவும் பணிவான இயல்பை உடையவராகவும், அன்புடனும், நேசத்துடனும், பரிவு காட்டுபவராகவும், மிருதுவான நடையில் பேசபவராகவும், மிகுந்த அனுதாப உணர்வு உடையவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் இருந்தார். ஒவ்வொருவருடனும் கலப்பற்ற தூய தொடர்பு வைத்திருந்தார். சந்தாக்கள் மற்றும் பொருளாதார திட்டங்களில் அதிகமான ஆர்வத்துடன் பங்கு பெறுபவராக இருந்தார். அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துபவராக இருந்தார். ஒருவருக்கு சிறு துன்பம் நேர்வதைக் கண்டாலும் அவர் அமைதியற்ற நிலையில் காணப்படுவார். அவருக்கு உதவி செய்யாத

வரை இவருக்கு நிம்மதி ஏற்படாது. அவரது பக்கத்து வீட்டுக்காரர் என்னிடம் கூறினார். இவர் ஜமாஅத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவர் கூறினார். கொடுங்காற்று மற்றும் புயல் காரணமாக வீட்டிற்கு இடையிலிருந்த மரத்தால் ஆன சுவர் இடிந்து விழுந்தது. அந்த சமயத்தில் பயணத்தில் செல்ல வேண்டியது இருந்தும் கவலைப்பட வேண்டாம்; நானே அதை சரிசெய்து விடுவேன் என்று கூறிவிட்டு இரண்டு நாட்கள் கழிந்த பிறகு அவரே அந்த சுவரை சரி செய்து விட்டார்.

எவ்வாறிருப்பினும் மிகுந்த மனத்தூய்மையுள்ள மக்களுக்கு பயன்தரக்கூடிய நபராக இருந்தார். கிலாஃபத்திற்காக தன்னை அர்ப்பணிப்பவராகவும் ஜமாஅத் அமைப்பு நிலைத்திருப்பதற்காகவும் அதற்கு தொண்டாற்றுவதற்காகவும் செயல் அளவில் எப்போதும் தயாராக இருப்பவராகவும் அவர் இருந்தார். இவருக்கு பின்னால் இவரது மனைவியும் ஒரு மகளும் இருக்கின்றார்கள்.

**அரேபிக் டெஸ்கைச் சேர்ந்த இக்ரிமா சாஹிப் அவர்கள் எனக்கு முன்னால் அமர்ந்துள்ளார்கள். அவர்கள் எனக்கு எழுதினார்கள்:**

ஜமாஅத்தின் செல்வங்களையும், நபர்களையும் எப்போதும் கருத்தில் கொள்கின்ற அகப்பார்வை மிக்க மனிதராக இவர்கள் இருந்தார்கள். ஜமாஅத் ரீதியாக நாட்டின் உட்புற மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் மீது இவருக்கு ஆழ்ந்த பார்வை இருந்தது. மிகவும் வீரமிக்க மனிதராக அவர் இருந்தார். இறைவனது வழியில் எந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கும் எதை பற்றியும் கவலைப்படாதவராக அவர்கள் இருந்தார்கள். மிகவும் தாராள மனமுடைய நல்லொழுக்கமுள்ள மனிதராக இருந்தார்கள். இவர்கள் எழுதுகின்றார்கள். புதிய அஹ்மதிகளுக்கு கருணைமிக்க தந்தை போன்று இவர்கள் இருந்தார்கள்.

இது முற்றிலும் உண்மையாகும். எனக்கு பல புதிய அஹ்மதிகள் இதுபற்றி எழுதியிருந்தார்கள். அவர்கள் சில சமயம் புதிய அஹ்மதிகளை சந்திப்பதற்காகவும் கிலாஃபத்துடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் 500 மைல்கள் வரை பயணத்தில் சென்றுள்ளார்கள். ஹஜ் மற்றும் உம்ரா செய்வதற்கான நற்பாக்கியமும் அவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு மேலாடை இவர்களிடம் இருந்தது. ஹஜ் அல்லது உம்ரா செய்யும் சமயத்தில் அந்த ஆடையை அணிந்தவாறு இறை இல்லமான கஃபாவை அந்த ஆடையால் தொட்டார்கள்.

இவர்களது மனைவி எழுதுகின்றார்கள்: நான் இவருடன் 32 வருடங்கள் ஒன்றாக இருந்திருக்கின்றேன். ஆனால் இந்த முழு காலக்கட்டத்தில் அவர்கள் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கியதாக என்னால் பார்க்க முடியவில்லை. மிகுந்த பரிவுடன் நடந்து கொள்பவராகவும் ஒவ்வொருவருடனும் நேசம் வைத்திருப்பவராகவும் அன்னார் இருந்தார்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையான ஊழியராகவும், கிலாஃபத் மீது அளவு கடந்த பற்று உடையவராகவும், அதற்காக உயிரையே அர்ப்பணிப்பவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும் ஓர் உண்மையான மனிதராகவும் அவர் இருந்தார்.

எவற்றை இவர்கள் எழுதியுள்ளார்களோ அதில் எதையும் மிகைப்படுத்தி அவர்கள் எழுதவில்லை.

அவர்கள் தங்கள் வாழ்க்கையை மிகுந்த கட்டுப்பாட்டுடனும் நேரத்தை பேணியவாறும் கழித்தார்கள். 40 வருடங்களுக்கும் அதிகமாக 9ல் ஒரு பங்கை வஸிய்யத் செய்திருந்தார்கள். அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறி வந்தார்கள். வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட முதலாவதாக கிலாஃபத், பிறகு குடும்பம், அதற்குப் பிறகு மற்ற விசயங்கள் வருகின்றது என்றார்கள். இவர்கள் ஹாஸிம் சாஹிபின் டைரியில் அவர்கள் எழுதி வைத்திருந்த சில கனவுகளை பார்த்தார்கள். ஒரு கனவு தொடர்பாக அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

ஓரிரவில் நான்கு முறை இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள். இதில் முதல் முறை சந்தித்த போது பெருமானார் (ஸல்) அவர்களது முகம் சூரியன் போன்று பிரகாசமாக மின்னிக் கொண்டிருந்தது. அவர்கள் தங்கள் கையில் ஒரு மோதிரத்தை அணிந்திருந்தார்கள். அதிலிருந்தும் மிகவும்

பிரகாசமான கிரணங்கள் வெளியாகிக் கொண்டிருந்தது. அவர்கள் தலையை வைத்து சாய்ந்து அமர்ந்தவாறு ஏதோ படித்துக் கொண்டிருந்தார்கள். அப்போதும் அந்த மோதிரத்திலிருந்து மிகவும் பிரகாசமான கிரணங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

பிறகு இன்னொரு கனவையும் அவர்கள் எழுதியுள்ளார்கள். நான் ஒரு வீட்டில் இருந்தேன். அதில் அம்மா ஜான் அவர்கள் வசித்து வருகின்றார்கள். மிகவும் அன்புடனும் நேசத்துடனும் அவர்கள் என்னை சந்திக்கின்றார்கள். மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் என்னை வரவேற்றார்கள். பகலின் ஆரம்ப பகுதியை நான் அவர்களுடன் கழித்தேன். இந்த சமயத்தில் அம்மா ஜான் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்வில் நடந்த எண்ணற்ற சம்பவங்களை நிகழ்ச்சிகளை எனக்கு கூறுகின்றார்கள். இவ்வாறு 5 அல்லது 6 மணி நேரம் கழிந்த பிறகு ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களும் நானும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வீட்டிற்குச் சென்று முழு நேரமும் அங்கேயே கழிக்கின்றோம். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தூய வாழ்க்கையிலிருந்தும் எண்ணற்ற சம்பவங்களை எனக்கு கூறினார்கள். மேலும் சில வழக்குகள் பற்றி கூறும்போது அல்லாஹ் எனக்கு இந்த இல்ஹாமை இறக்கினான். இந்த வஹியை அறிவித்தான் என்று கூறினார்கள். பிறகு வஹி இறங்கும் வழிமுறை மற்றும் இது தொடர்பான எல்லா விசயங்களையும் கூறினார்கள். பிறகு வஹியின் சொற்களையும் கூறினார்கள். மாலை நேரத்தில் நான் அங்கிருந்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த போது கனவிலேயே உரையாடல் சொல் வடிவில் இல்லாமல் உணர்வாகவே இருந்தது. எந்த தோற்றமும் தென்படவில்லை. இவ்வாறே அவர்கள் என்னையும் கனவில் கண்டார்கள். என்னிடம் அவர்கள் நான் வஃபாத் ஆகி விட்டேன் என்று அதில் கூறுகின்றார்கள். இதைக்கேட்ட நான் இது உண்மையாகும். செல்லுங்கள். உணவருந்துங்கள் என்று கூறுகின்றேன். இதற்கு பிறகு எனது கண்கள் திறந்தது என்று இவர் கூறுகின்றார். அல்லாஹ் ஜன்னத்தில் ஃபிர்தவ்ஸின் தனது விருந்தோம்பலை இவருக்கு வழங்குவானாக!

நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு நீண்ட காலக்கட்டம் U.K.–ல் இவர்கள் ஜமாஅத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தார்கள். முதலில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர் இங்கிலாந்தை விட்டும் வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்காமல் இருந்தார்கள். பல்வேறு இடங்களில் இவருக்கு நல்ல வேலைகள் கிடைத்திருந்தும் கூட இவர் இங்கிலாந்திலேயே இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இவர் படித்தவராக இருந்தார். தனது பணிகளில் திறமை பெற்றவராக இருந்தார். பிறகு 2000 ம் ஆண்டில் அவர்களுக்கு அன்னார் அனுமதி வழங்கினார்கள். படித்தவராகவும் தனது பணிகளில் திறமை பெற்றவராகவும் இருந்தும் கூட தான் மிகவும் படித்தவர் என்று அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. அதனால் கர்வம் உருவாகி விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு இருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் வஃபாத்திற்குப் பிறகு எனக்கு இவருடன் முதல் தொடர்பு ஏற்பட்டது. அப்போது நான் பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்திருந்தேன். ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டதற்கு முன்னதாக இவர் மிகுந்த பணிவுடன் பல்வேறு அறிவுப்புகளை எழுதிக் கொண்டு வந்தார். அந்த அறிவிப்புகளை வெளியிட வேண்டியது இருந்தது. M.T.A.வில் அந்த அறிவிப்புகள் செய்யப்பட வேண்டியது இருந்தது. எப்போதெல்லாம் இவரிடம் இந்த சொற்றொடரை இப்படி எழுதுங்கள். இங்கு இந்த சொல்லை பயன்படுத்துவதன் பொருத்தமான செயலாகும் என்று கூறும்போது உடனடியாக எதையும் கூறாமல் அதை மாற்றி விடுவார்கள். நான் முழு வாழ்நாளையும் இங்கு கழித்துள்ளேன். நான் படித்தவன். இதில் எனக்கு திறமை இருக்கின்றது. சிறந்த அறிவிப்பாக எனது அறிவிப்பே இருக்க முடியும் என்றெல்லாம் அவர் ஒருபோதும் கூறியதில்லை.

மாறாக எவ்வாறு கூறப்பட்டதோ அவ்வாறு அதில் மாற்றம் செய்தார்கள். இவரது பணிவும் ஒவ்வொருவருக்கும் முன்மாதிரியாக இருக்கின்றது. இவரது தொண்டாற்றும் உணர்வும் ஒவ்வொருவருக்கும் முன்மாதிரியாக இருக்கின்றது. கிலாஃபத்திற்கு கீழ்படிவது, அதன் மீது அன்பு கொள்வது ஆகியவற்றில் இவர் முன்மாதிரியாக திகழ்ந்தார். ஓய்வு பெறுவதற்கு முன்னதாக இவர் என்னிடம் நான் வேலை பார்த்து வருகின்றேன். ஆனால் நீண்ட காலகட்டமாக வக்ஃப் செய்ய வேண்டும் என்பது எனது ஆசையாகும் என்று கூறினார்.

உண்மையிலேயே இதற்கு முன்னரும் பல முறை இவர்கள் என்னிடம் இதைக் கூறியிருந்தார்கள். நான் வக்ஃப் செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார். ஆனால் நான் எப்போதும் அவரிடம் நீங்கள் இப்போது எங்கு உள்ளீர்களோ அங்கு உங்களது தேவை இருக்கின்றது. எனவே, நீங்கள் வக்ஃபில் உள்ளீர்கள் என்று கருதிக் கொள்ளுங்கள் என்று கூறியிருந்தேன். ஆனால் எவ்வாறு இவர்கள் பணியாற்றினார்கள் என்றால் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள ஒருவர் செய்வதை விட அதிகமான பணிகளை இவர் செய்திருந்தார். ஒவ்வொரு வருடமும் இது தொடர்பாக அவர் எனக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தார். இப்போது இவர் ஓய்வு பெற்றிருந்தார். ஆனால் மீண்டும் இவருக்கு தொடர்புகள் கிடைத்தன. அப்போது நான் அவரிடம் உங்களது வேலை அங்கு இருக்கும் வரை நீங்கள் அங்கேயே இருங்கள். அங்கு உங்களது தேவை உள்ளது என்று கூறியிருந்தேன்.

மிகவும் தைரியத்துடனும் நுட்பமான ஞானத்துடனும் அனைத்து பணிகளையும் இவர்கள் செய்து முடித்தார்கள். இவர்கள் மூலமாக அங்கு பல பைஅத்துகள் நடந்தது. மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதில் இவர் பணியாற்றியுள்ளார். கணக்குப் பணியிலும் அதனை நிர்வகிப்பதிலும் இவர் திறமை பெற்றவராக இருந்தார். இவர் இருப்பதன் காரணமாக எனக்கு அங்குள்ள ஜமாஅத் கணக்கு வழக்கு தொடர்பாக எந்த கவலையும் இருந்ததில்லை. இதை தவிர்த்தும் பல முக்கிய பணிகள், பல முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக அவற்றை தீர்விற்கு கொண்டு வருவதற்காக இவரை அனுப்பி வைத்தால் மிகச் சிறந்த வழிமுறை மூலமாக இவர்கள் அந்த எல்லா பணிகளையும் செய்து முடித்தார்கள்.

இங்கு அடிக்கடி அவர்கள் வந்து விட்டு செல்வார்கள். எப்போது வந்தாலும் இப்போது சோர்வு ஏற்பட்டுள்ளது. சற்று ஓய்வு எடுப்போம் என்றில்லாமல் வந்ததும் நேரடியாக பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். எத்தனை நாட்கள் இங்கு தங்கினாலும் பஸ்ல் பள்ளிவாசலில் அவர்கள் ஜமாஅத்தாக தொழுவார்கள். இதற்காக தனது வீட்டையும் பக்கத்தில் அமைத்துக் கொண்டார்கள். சுருக்கமாக இவர் கிலாஃபத்திற்கு உண்மையில் உதவி செய்கின்ற சுல்தானுல் நஸீராக – மிகச் சிறந்த உதவியாளராக இருந்தார்கள். இவர் நம்மை விட்டு பிரிந்து சென்றதால் ஒரு மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

அல்லாஹ் அத்தகைய தக்வாவை பேணுகின்ற பணிகளை செய்கின்ற பணியாளரை நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக! நம்மீது அன்பு வைத்துள்ள அந்த இறைவன் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். அவன் இவர்களை போன்ற லட்சக்கணக்கான சிறந்த உதவியாளர்களை நமக்கு வழங்குவான். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக! அவர்களுக்கு தனது அன்பிற்குரியவர்களின் பாதங்களுக்குக் கீழ் இடமளிப்பானாக! அவர்களது தொண்டுகள் பற்றிய விபரங்கள் வாழ்க்கை பற்றிய விபரங்கள் மிகவும் நீளமானதாக இருக்கின்றது. இவரைப் பற்றி தெரிந்திருப்பவர்கள் இவரைப் பற்றி எழுதுவார்கள் என நான் நம்புகிறேன்.

அல்லாஹ் U.K. ஜமாஅத்திற்கு இவரைப் போன்ற சுயநலமற்ற பணியாளர்களை வழங்குவானாக! இவரது மனைவி மற்றும் மகளை பாதுகாப்பானாக! அவர்களுக்கு உதவி செய்வானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 24.08.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456